# 17 ஆகஸ்ட் 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

### சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் முதல்வரிடம் காவல் துறையினர் வாழ்த்து



- காவல் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள், கனடா நாட்டின் வின்னிபெக் நகரில் ஜூலை 27–இல் தொடங்கி கடந்த 6–ஆம் தேதி வரை நடை பெற்றது.
- இந்தப் போட்டிகளில் சுமார் 50 நாடுகளில் இருந்து 8,500–க்கும் அதிகமான காவல் மற்றும் தீயணைப்புத் துறை வீரர்கள் பங்கேற்றனர். இதில், தமிழ்நாடு காவல் துறை தடகள் அணியைச் சேர்ந்த காவல் கண்காணிப்பாளர் ஏ.மயில்வாகனன், காவல் ஆய்வாளர்கள் உட்பட 15 பேர் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றனர்.
- அவர்கள் 15 தங்கம், 11 வெள்ளி மற்றும் 15 வெண்கலம் என மொத்தம் 41 பதக்கங்களை வென்றுள்ளனர்.
- இதுவே, தமிழ்நாடு காவல் துறை தடகள் அணி ஓராண்டில் வென்ற அதிகபட்ச பதக்கங்களாகும்.

## விளையாட்டு

### சென்னையில் முதல்முறையாக இரவு நேர மோட்டார் பந்தயம்



- இந்திய மோட்டார் விளையாட்டுகள் வரலாற்றில் சிறப்பு நிகழ்வாக பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ரேஸிங் புரோமோஷன்ஸ்(பி)லிட் ஆகியவை இணைந்து சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் பந்த யத்தை நடத்த உள்ளன.
- வரும் டிசம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் சென்னை தீவுத் திடல் மைதானத்தில் 3.5 கி.மீ தொலைவுக்கு இரவு நேர பந்தயமாக(ஸ்ட்ரீட் சர்க்யுட்) நடத்தப்படுகிறது.
- இரவு நேர பந்தயம் இந்தியா மற்றும் தெற்கு ஆசிய பகுதிகளில் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். இரண்டு சாம்பியன் ஷிப் போட்டிகளிலும் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஆண், பெண் ஓட்டுநர்கள் பங் கேற்க உள்ளனர்.

SHANMUGAM IAS ACADEMY

- ரூ.42 கோடி நிதி: எஃப்4 இந்தி யன் சாம்பியன்ஷிப் என்பது எஃப் ஐஏ சான்றளிக்கப்பட்ட பந்தயம் ஆகும்.

## ஜூனியர் மல்யுத்தம்: அமித் குமார் 'யு20' உலக சாம்பியன்




- ஜோர்டானில் நடைபெறும் 20 வயதுக்கு உள்பட்டோருக்கான (யு20) உலக மல்யுத்த போட்டியில் இந்தியாவின் அமித்குமார் தங்கம் வென்று சாம்பியன் ஆனார்.
- ஜூனியர் பிரிவில் 2019-க்குப் பிறகு "உலக சாம்பியன் ஆன முதல் இந்தியர்" என்ற பெருமையை அவர் பெற்றார். ஆடவருக்கான 61 கிலோ இறுதிச்சுற்றில் அவர், ரஷியாவின் எல்தார் அக்மதுனிநோவை வீழ்த்தி வாகை சூடினார்.
- முன்னதாக பல்வீந்தர் சீமா,ரமேஷ் குமார் (2001), தீபக் புனியா (2019) ஆகியோர் ஜூனியர் சாம்பியன் ஆன நிலையில், அந்தப் பட்டம் வென்ற 4-ஆவது இந்தியர் ஆகியிருக்கிறார் அமித் குமார்.
- ஆடவருக்கான 74 கிலோ பிரிவில் ஜெய்தீப் – கிர்ஜிஸ்தானின் ஜாகீஷிலிக் ரஸ்லானோவிச்சை சாய்த்து வெண்கலப் பதக்கம் பெற்றார்.
- இதுவரை இந்தப் போட்டியில் இந்தியர்கள் 1 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் என 5 பதக்கங்கள் வென்றுள்ளனர்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

## மதி சந்தை ஆன்லைன் விற்பனை தளம்

- சுய உதவி குழுவினரின் தயாரிப்புகளை விற்க, 'மதி சந்தை' இணையவழி விற்பனை தளம் விரைவில் உருவாக்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- "தீன்தயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின்" கீழ் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்புக்காக 2023-24-ல் புதிதாக 10 ஆயிரம் சுய உதவி குழுக்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- குழுக்களின் உற்பத்தி பொருட்களை அவர்களுக்குள்ளும், பிற பெரும் வணிக நிறுவனங்கள் மூலமாகவும் விற்க, மாநில, மாவட்ட அளவில் வாங்குவோர் – விற்போர் சந்திப்பு நடத்தப்படும்.

## 'மதி எக்ஸ்பிரஸ்' வாகனங்கள்

- இதுதவிர, உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்தவும், விற்கவும் முக்கிய சுற்றுலா தலங்களில் 'மதி அங்காடிகள்' நிறுவப்படும்.
- பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக 'மதி எக்ஸ்பிரஸ் வாகனங்கள்' வழங்கப்பட உள்ளன.

SHANMUGAM IAS ACADEMY

- சுயஉதவி குழுக்களால் இயக்கப்படும் 'மதி திணை உணவகங்கள்', மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் அமைக்கப்பட உள்ளன.
- மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலம் சுகம்ய பாரத் அபியான் (தடையற்ற சூழலை உருவாக் குவதற்கான இயக்கம்) திட்டத்துக்கு சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## காலை உணவுத் திட்டம்

- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நிகழாண்டில் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.
- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு காலை உணவுத் திட்டம் குறித்து பயிற்றுவிக்கப்படும்.
- அவர்களது பங்கேற்பின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## இந்தியாவின் முதல் ட்ரோன் சோதனை மையம்



- தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் 4 நிறுவனங்கள் இணைந்து ஸ்ரீபெரும்புதூர் அருகே சிப்காட் தொழிற்பூங்காவில் இந்தியாவின் முதல் ட்ரோன் சோதனை மையத்தை அமைக்க உள்ளது.
- அதன் அடிப்படையில், "கெல்டிரான், சென்ஸ் இமேஜ், ஸ்டாண்டர்டு டெஸ்டிங் அண்ட் காம்ப்ளையன்ஸ் மற்றும் அவிக்ஷா ரீடெய்லர்ஸ்" ஆகிய 4 நிறுவனங்கள் டிட்கோவுடன் இணைந்து ரூ.45 கோடி மதிப்பீட்டில் ட்ரோன் சோதனை மையத்தை அமைக்க உள்ளன.
- இந்தசோதனை மையம், ஆளில்லா விமானத்தின் ஆராய்ச்சி,வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி மற்றும் சோதனைகளுக்குத் தேவையான பல்வேறு வசதிகளை ஒரே இடத்தில் சர்வதேச தரத்தில் வழங்கும்.
- இந்தியாவின் முதல் பொது ஆளில்லா விமான சோதனை மையம் தமிழகத்தில் அமைய இருப்பது, "வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்திச் சூழலில் உயரிய இடத்தை தமிழகம் அடைய உதவும்".

## டி.எம்.சவுந்தர்ராஜன் முழு உருவ வெண்கல சிலை



- மதுரை முனிச்சாலை பகுதியில் ரூ.50 லட்சத்தில் மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலக வளாகத்தில், பழம்பெரும் பாடகர் டி.எம்.சவுந்தர்ராஜனுக்கு முழு உருவ வெண்கலச்சிலை அமைக்கப்பட்டது.

SHANMUGAM IAS ACADEMY

- சிலையை நேற்று முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

## தேசிய செய்திகள்

### கொல்கத்தாவில் "போதைப்பொருள் இல்லாத வங்கம்" பிரச்சாரத்தை தொடங்குவதற்காக குடியரசுத் தலைவர் துருபதி முர்மு மேற்கு வங்கத்திற்கு வருகை

- கொல்கத்தாவின் ராஜ் பவனில் பிரம்மா குமாரிஸ் ஏற்பாடு செய்துள்ள 'நஷா முக்த பாரத் அபியான்' திட்டத்தின் கீழ் 'எனது வங்காளம், போதை இல்லாத வங்காளம்' என்ற பிரச்சாரத்தை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்.
- கார்டன் ரீச் கப்பல் கட்டுமான பொறியியலாளர்கள் லிமிடெட் நிறுவனத்தில் இந்திய கடற்படையின் ஆறாவது கப்பலான விந்தியகிரி – 17A திட்டத்தின் ஆறாவது கப்பலையும் குடியரசுத் தலைவர் தொடங்கி வைப்பார்.

### கிராமப்புற மற்றும் நகர்ப்புற இந்தியாவின் பாரம்பரிய கைவினைஞர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்களுக்கு ஆதரவளிப்பதற்காக 13 ஆயிரம் கோடி ரூபாய் நிதி செலவினத்துடன் பிரதமர் விஸ்வகர்மா திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- புதிய மத்தியத் துறைத் திட்டம், கைவினைஞர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்கள் தங்கள் கைகள் மற்றும் கருவிகளுடன் பணிபுரியும் பாரம்பரிய திறன்களின் குடும்ப அடிப்படையிலான நடைமுறையை வலுப்படுத்துவதையும் வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அமைச்சரவைக் குழு, இந்தத் திட்டத்திற்கு ஐந்து ஆண்டு காலத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், இந்தத் திட்டத்தின் கீழ் 18 பாரம்பரியத் தொழில்கள் முதலில் உள்ளடக்கப்படும் என்றார்.
- இத்திட்டத்தால், தச்சு வேலை, படகு தயாரிப்பு, இரும்புக் கொல்லர், ஆயுதங்கள் தயாரிப்பு, சுத்தியல் மற்றும் உபகரணங்கள் தயாரிப்பு, பூட்டு தயாரிப்பு, பொற்கொல்லர், மண்பாண்டக் கலைஞர், சிற்பி, கல் உடைப்பவர், காலணி தைக்கும் கலைஞர், கொத்தனார், கூடை – பாய் – துடைப்பம் – தேங்காய் நார் மூலம் கால்மிதியடி தயாரிப்போர், பொம்மை கலைஞர்கள், முடிதிருத்துவோர், பூ மாலை தயாரிப்பவர், சலவை தொழிலாளர், தையல் கலைஞர், மீன்பிடி வலை தயாரித்தல் ஆகியோர் இதில் அடங்குவர்.
- பிஎம் விஸ்வகர்மா திட்டத்தின் கீழ், கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு பிஎம் விஸ்வகர்மா சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை

SHANMUGAM IAS ACADEMY

மூலம் அங்கீகாரம் வழங்கப்படும், 1 லட்சம் ரூபாய் (முதல் தவணை) மற்றும் 2 லட்சம் ரூபாய் (இரண்டாவது தவணை) வரையிலான கடன் ஆதரவு 5% சலுகை வட்டி விகிதத்துடன் வழங்கப்படும்.

- ❖ இந்தத் திட்டம் திறன் மேம்பாடு, கருவித்தொகுப்பு ஊக்கத்தொகை மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவுக்கான ஊக்கத்தொகையை வழங்கும்.
- ❖ இந்தத் திட்டத்தின் மூலம் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைவார்கள்

## பசுமைப் போக்குவரத்தை ஊக்குவிக்க 169 நகரங்களில் 10,000 மின் பேருந்துகளுக்கு ரூ 57,613 கோடியில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- ❖ பத்தாயிரம் மின் பேருந்துகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நகர்ப்புற பேருந்து செயல்பாடுகளை அதிகரிக்க பிரதமர் இ–பஸ் சேவையை அரசு அங்கீகரித்துள்ளது.
- ❖ 169 நகரங்களில் பத்தாயிரம் புதிய மின்சார பேருந்துகள் இயக்கப்படும்.
- ❖ 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மூன்று லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்கள், யூனியன் பிரதேசங்கள், வடகிழக்கு பிராந்தியம் மற்றும் மலைப்பகுதி மாநிலங்களின் தலைநகரங்கள் உட்பட இந்தத் திட்டம் உள்ளடக்கப்படும்
- ❖ பத்தாயிரம் பேருந்துகளை நகர்ப்புற பேருந்து இயக்கத்தில் பயன்படுத்துவதன் மூலம் இந்தத் திட்டம் 45 ஆயிரம் முதல் 55 ஆயிரம் நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.
- ❖ பசுமை நகர்ப்புற நகர்வு முன்முயற்சிகளின் கீழ் கட்டண வசதி கட்டமைப்புகளை உருவாக்குவதில் நகரங்களுக்கு ஆதரவு வழங்கப்படும்.
- ❖ மின்சார போக்குவரத்தை ஏற்றுக்கொள்வது மூலம் ஒலி மற்றும் காற்று மாசுபாட்டைக் குறைக்கும் மற்றும் கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்தும்.

## இந்திய ராணுவம் டெல்லியில் "மனதின் போர்" – இந்திய ராணுவ வினாடி வினா 2023 ஐ அறிமுகப்படுத்தியுள்ளது

- ❖ இந்திய ராணுவம் தனது லோகோவுடன் "மனதின் போர்" – இந்திய ராணுவ வினாடி வினா 2023 ஐ டெல்லி கண்டோன்மென்டை சேர்ந்த மேனெக்ஷா மையத்தில் இன்று துவக்கி வைத்தது.
- ❖ கார்கில் போரில் இந்திய ராணுவம் பெற்ற வெற்றியைக் கொண்டாடும் விதமாக இந்த வினாடி வினா போட்டி நடைபெறுகிறது.
- ❖ இந்தத் திட்டம், நாடு முழுவதும் உள்ள இளைஞர்களின் அறிவுசார் வளர்ச்சியை மேம்படுத்தும் மற்றும் அவர்களை ஊக்குவிக்கும் ராணுவத்தின் உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறது.
- ❖ இந்த முயற்சி நாடு முழுவதும் உள்ள சுமார் 1.5 லட்சம் பள்ளிகளை சென்றடைகிறது.

SHANMUGAM IAS ACADEMY

- சுமார் 15 ஆயிரம் பள்ளிகளை பதிவு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த போட்டியில் நாடு முழுவதும் சுமார் 1.5 கோடி மாணவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜி20 சுகாதார அமைச்சர்களின் கூட்டம் காந்திநகரில் ஆகஸ்ட் 17–ல் தொடங்குகிறது

- ஜி20 இந்தியா தலைமைத்துவத்தின் கீழ் சுகாதார அமைச்சர்கள் கூட்டம் 2023 ஆகஸ்ட் 17 முதல் 19 வரை குஜராத்தின் காந்திநகரில் நடைபெறும்.
- ஜி20 சுகாதார அமைச்சர்கள் கூட்டம் சுகாதாரத்தில் அவசரநிலைகள் ஏற்படுவதைத் தடுத்தல், தயார்நிலை மற்றும் சிகிச்சை, மாற்று நுண்ணுயிர் எதிர்ப்பு, ஒரே சுகாதார கட்டமைப்பு என்ற மூன்று முக்கிய முன்னுரிமைகளில் கவனம் செலுத்தும்.
- ஆகஸ்ட் 17 அன்று ஜி20 பிரதிநிதிகள் கூட்டமும், ஆகஸ்ட் 18 – 19 தேதிகளில் ஜி 20 சுகாதார அமைச்சர்கள் கூட்டமும் நடைபெறும்.
- இது தவிர, ஒரே பூமி, ஒரே சுகாதாரம் – மேம்பட்ட சுகாதார கவனிப்பு– இந்தியா 2023 உள்ளிட்ட நான்கு துணை நிகழ்வுகள் இடம்பெறும்.
- உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் குறித்த உலகளாவிய உச்சி மாநாடு; இந்தியா மருத்துவ தொழில்நுட்பக் கண்காட்சி–2023, 'தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் காசநோயை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்த மாநாடு ஆகியவையும் நடைபெறும். ஜி20 சுகாதார அமைச்சர்கள் கூட்டத்தின் மைய நிகழ்வாக ஆகஸ்ட் 19 அன்று நிதி – சுகாதார அமைச்சர்களின் கூட்டுக் கூட்டமும் நடைபெறும்.
- காந்திநகரில் நடைபெறும் 4–வது சுகாதார அமைச்சர்கள் கூட்டத்தில் 19 ஜி 20 உறுப்பு நாடுகள், 10 அழைப்பு நாடுகள் மற்றும் 22 சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.
- 'விருந்தினர்களே கடவுள்கள்' என்ற இந்திய தத்துவத்தின் அடிப்படையில் இந்தியாவின் வளமான பன்முகத்தன்மை மற்றும் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வகையில் குஜராத் கலாச்சாரத்தின் சுவைகள் நிறைந்த பல கலை நிகழ்ச்சிகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளன.

## 14,903 கோடி செலவில் டிஜிட்டல் இந்தியா திட்டத்தை விரிவாக்கம் செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது

- 14 ஆயிரத்து 903 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டிஜிட்டல் இந்தியா திட்டத்தை விரிவாக்கம் செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- டிஜிட்டல் இந்தியா திட்டம் 2015–ம் ஆண்டு தொடங்கப்பட்டு, ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், ஆறு லட்சத்து 25 ஆயிரம் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மறுதிறன் மற்றும் திறன் மேம்படுத்தப்படுவார்கள்

SHANMUGAM IAS ACADEMY

- தகவல் பாதுகாப்பு மற்றும் கல்வி விழிப்புணர்வு திட்டத்தின் கீழ் இரண்டு லட்சத்து 65 ஆயிரம் பேருக்கு தகவல் பாதுகாப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படும்
- அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 நகரங்களில் ஆயிரத்து இருநூறு ஸ்டார்ட்அப்கள் ஆதரிக்கப்படும்

SHANMUGAM IAS ACADEMY